RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s2170

OPEN ACCESS

# கல்வெட்டுகளின் சிறப்பும் கல்வெட்டுகளில் காணப்படும் மொழியியலின் ஆளுமைகளும்

பா. விஜயலெட்சுமி [அ, *]

[அ] முதுகலை வரலாற்றுத் துறை, காதிர் முகைதீன் கல்லூரி, அதிராம்பட்டினம், தஞ்சாவூர்-614701, தமிழ்நாடு, இந்தியா.

# Specialties of Inscriptions and Linguistic Personality Found in Inscriptions

B. Vijayalakshmi [a, *]

[a] PG & Department of History, Khadir Mohideen College, Adirampattinam, Thanjavur-614701, Tamil Nadu, India

* Corresponding Author: vijayalakshmiph.d78@gmail.com

Received: 08-09-2022
Revised: 27-09-2022
Accepted: 06-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

Inscriptions can survive for thousands of years. Inscriptions have been developing since the 16th century. They are the most reliable evidence of the most ancient historical messages and events. An inscription is a message engraved on a stone to be immortalized for a long time. Inscriptions are also engraved on stone, copper plate and paper. In the inscriptions mostly the edicts of the kings, their works, and victories, donations for temples, festivals, social customs, genealogical references and traditional stories are engraved. Inscriptions are often found in public places. We can see inscriptions in caves, common halls, pillars and so on. The practice of engraving on inscriptions is done all around the world. Archaeology department has brought to light many languages that are still alive and used by many people. The oldest inscriptions in Tamil Nadu are engraved on middle stones and it is proved in the book Tolkappiyam. There are references in the Tolkapiyam about the martyrs on the battlefield, stone carvings and engravings of heroic deeds. During the Pallavar period, inscriptions were inscribed in Bragirutham, Sanskrit, and Tamil languages. Cholars and Pandiars used to engrave inscriptions. Thus inscriptions flourished in Tamilnadu and much of medieval history is known. Over the 120 years hundreds of inscriptions have been found in South India. Inscriptions are carved on stones. No one can revise, rewrite and render something new in it because it is carved in stone. The uniqueness of the inscriptions is that it remains unchanged even today. Thus this article is about the ancient stone inscriptions, its features and about the linguistic personality used in this inscriptions.

**Keywords:** Inscriptions, Languages, Alphabets, Plates

## முன்னுரை

பழங்காலத்தின் பதிவுகளில் பெரும் பகுதியை மீட்டெடுப்பதில் கல்வெட்டு ஒரு பிரதான கருவியாகும். பண்டைய மக்களின் கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம், பொருளாதார நிலை, வாழ்க்கை முறை, சுற்றுச்சூழல், கட்டிட அமைப்பு, நிர்வாகமுறை பற்றிய ஆய்வுக்கு இன்றியமையாத துணையாகும். பிந்தையகால கட்டடங்களில் கல்வெட்டுகள் நினைவுச் சின்னமாக எழுதப்பட்ட பதிவின் நுட்பங்கள் பணிகள் பற்றிய நுண்ணறிவை வழங்குகிறது. பண்டைய நாகரிகங்களில் எழுதப்பட்ட பொருட்களின் குகைகள், பளிங்கு, பானைஓடுகள், உலோகம், களிமண், மட்பாண்டங்கள், டெரகோட்டா, மரம், முத்திரைகள், மோதிரங்கள், மெழுகுவர்த்திகள், பாப்ரஸ், பழமையான காசுகளிலும் கல்வெட்டுகளை ஒத்த எழுத்து பொறிப்புகள் உள்ளன. பதிவு செய்யும் நுட்பங்கள் வெட்டுதல், செதுக்குதல், வேலைபாடு,

வார்ப்பு, பொரித்தல், அரிப்பு, ஓவியம், வரைதல் முதலியன இரண்டாம் நிலை தன்மையைக் கொண்டது. கல்வெட்டுகள் பெரிய அளவில் கல்வெட்டுகளை உள்ளடக்கியது (Selvaraj & Sridhar, 2005). இவை முதன்மை எழுத்து பரப்புகளில் உள்ளது. குவளைகள், பானைகள், கற்கள், முத்திரைகள், மோதிரங்கள், விலங்குகள் மற்றும் கண்ணாடிகள் போன்ற பொருட்களில் உள்ளன. ஆரம்பகால கல்வெட்டுகள் எழுத்துகள் அல்லது வரைபடங்கள் நிகழ்வுகள் பற்றிய விரிவான தகவல்களை வழங்குகின்றன. கல்வெட்டுகள் பேரரசர்களால் வெவ்வேறு மொழிகளில் எழுதப்பட்டன. பண்டைய தமிழ் புராணங்களின்படி சேர சோழ பாண்டியர்கள் கொற்கையில் ஆட்சி செய்தனர். காவியமான சிலப்பதிகாரம் பாண்டியர்களின் சின்னம் மீனின் சின்னம் என்று குறிப்பிடுகிறது. பெரிய இதிகாசங்கள் மற்றும் புராணங்கள் போன்ற இந்திய மரபுகள் பெரும்பாலும் தென்னிந்தியாவில் அகஸ்திய முனிவருடன் தொடர்பு படுத்துகின்றன. அகஸ்தியர் இடைக்கால தமிழ் இலக்கியங்களிலும் முக்கியமாக தோன்றுகிறார்.

## கல்வெட்டுகளின் நோக்கங்கள்

- கல்வெட்டுகள் வரலாற்றை அறிந்து கொள்வதற்கான முக்கியமான ஆதாரங்களாக திகழ்கிறது.
- கல்வெட்டுகள் என்பது பண்டைய காலத்தில் கற்களில் பொறிக்கப்பட்ட அல்லது உலோகங்களில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் ஆகும்.
- இவை பெரும்பாலும் இந்தியாவின் தென்பகுதிகளில் காணப்படுகின்றன. 4.செப்புதகடுகள், கட்டிடங்களின் கற்கள் போன்றவற்றில் பொறிக்கப்பட்டுள்ளன.
- கல்வெட்டுகளின் ஆய்வு எபிக்ராபி என்று அழைக்கப்படுகிறது.
- சுவர்களில் உள்ள ஓவியங்கள் பண்டைய கலாச்சாரங்கள் மற்றும் அவர்களின் நம்பிக்கைகள் பற்றி காட்சிப்படுத்துகிறது.
- வரலாற்று முந்தைய ஆட்சியாளர்கள் இவர்களின் வாழ்க்கைமுறை பற்றிய பல தகவல்களை வரலாற்று ஆசிரியர்களுக்கு தருகிறது.
- மொழியும் எழுத்துநடையும் அவர்களின் பொருளாதார மற்றும் கலாச்சார வாழ்க்கை முறைகளை வெளிச்சம் போட்டு காட்டுகிறது. எடுத்துக்காட்டாக மால்வா வம்சத்தின் குமாரர் குப்தா மற்றும் பாண்டுவர்மன் ஆட்சியின் போது மண்டோசூர் கல்வெட்டு வணிக நோக்கங்களுக்காக முத்திரைகளை பயன்படுத்துவதை குறிக்கிறது.
- அந்தந்த நூற்றாண்டில் நடந்த பிறப்பு இறப்பு மற்றும் பிற முக்கிய தகவல்களைப் பற்றிய தகவல்களை வழங்குகிறது.
- பண்டைய மன்னர்கள் மற்றும் ராணிகள், அவர்களின் பெயர்கள், அவர்களின் உணவுபழக்கம் மற்றும் அந்த இடத்தில் உள்ள தாவரங்கள் விலங்குகள் பற்றிய மதிப்புமிக்க தோராயமான தகவல்களை நமக்கு வழங்குகிறது.
- ரொசேட்டா கல் வரலாற்று ஆசிரியர்கள் எகிப்திய எழுத்துக்களை பற்றி அறிய உதவுகிறது.
- ஆட்சியாளர்களின் காலவரிசை அவர்கள் பின்பற்றிய சமூக, அரசியல் சூழல், நிர்வாகமுறை, விவசாய பொருட்கள், வரிவிதிப்பு, அவர்களின் ஆட்சிகாலங்கள், பதவிஏற்பு இது போன்ற பல்வேறு தகவல்களை கல்வெட்டுகள் மூலமாக நாம் அறிய முடிகிறது.
- வரலாற்றிற்கு சிறப்புமிக்க ஆதாரமாகவும் நம்பத் தகுந்ததாகவும் வரலாற்றின் காலவரிசைகளை அறிந்து கொள்வதற்கும் வரலாற்று ஆசிரியர்களுக்கு பெரிதும் உறுதுணையாகவும் இருக்கிறது.

## கல்வெட்டுகளில் மொழி ஆளுமைகள்

தமிழ்நாட்டில் பலமொழி பேசுகின்ற அரச மரபுகள் ஆட்சி செய்ததால் தமிழைத் தவிர தெலுங்கு, கன்னடம், வடமொழி, பாரசீகம், அரபு மொழி கல்வெட்டுகளும், வட்டெழுத்து, கிழக்கிந்திய கம்பெனி வருகைக்குப் பின் ஆங்கில கல்வெட்டுகளும் காணப்படுகின்றன.

## தமிழ்பிராமி

2500 ஆண்டுகளுக்கு முன்பே தமிழை எழுத பயன்படுத்தப்பட்ட வடிவம் பிராக்கிருதம் பாலி மொழியில் பம்மி என்றும் சமஸ்கிருதத்தில் பிராம்மி என்றும் பெயர் பெற்றது. அசோகர் கால கல்வெட்டுகளில் தமிழ்பிராமி எழுத்துகள் காணப்படுகின்றன. தமிழகத்தில் இயற்கையாக அமைந்த மலைகுகைகள், பாறைகள், முகப்புகள், சமண சமயத்தவர் பயன்படுத்திய கற்படுக்கைகள், கல்வெட்டுகள், சேர சோழர் பாண்டியர் காலத்தில் வெளியிடப்பட்ட காசுகளிலும், தமிழக அகழாய்வுகளிலும் உடைந்த மண்பாண்டங்களிலும் இவ்வெழுத்துக்கள் இடம்பெறுகின்றன (Sidhamparanaar, 2008). எகிப்து, தாய்லாந்திலும் இவ்வகை எழுத்தில் அமைக்கப்பட்ட பொறிப்புகள் கிடைத்துள்ளன. இத்தகைய வளர்ச்சி படிநிலைகளை தாண்டியே தொல்தமிழ் எழுத்து வடிவம் நிலைப்பட்டது இத்தகைய படிநிலைகளை தமிழ்நாடு மற்றும் தென் ஆந்திர பகுதிகளிலும் பௌத்த தலமானபட்டிபுரோலூ ஆகிய இடங்களிலும் உள்ள கல்வெட்டுகளிலேயே காணமுடிகிறது. தொன்மை வாய்ந்த தமிழ் எழுத்து பல்வேறு வளர்நிலைகளைக் கடந்து வந்துவிட்ட வழியில் வட்டெழுத்து, தமிழ் என பல பெயர்கள் சூட்டப்பெற்றது. அவற்றில் ஒன்று தமிழ் என்று வழங்கப்படுவதாலும் மிகப்பழைய தமிழ் எழுத்துக்களை தொல் தமிழ்எழுத்து என்று பெயரிடலாம். ஆனால் தொல் எழுத்து அறிஞர்கள் பலரும் தமிழ்பிராமி என்ற சொல்லையே தொல்தமிழ் எழுத்துக்களை குறிக்க பயன்படுத்துகின்றனர். தமிழ்பிராமி எழுத்துக்கள் சங்க இலக்கியங்களில் பாண்டியன் நெடுஞ்செழியன் மற்றும் அதியமான் நெடுமானஞ்சி ஆகியோரின் பெயர்கள் தமிழ் பிராமி கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

## கிரந்தம்

கிரந்தம் சமஸ்கிருத மொழியை எழுதுவதற்கு பயன்படுத்தப்பட்ட எழுத்து முறையை கிரந்தம் ஆகும். கிரந்தம் என்பது சமஸ்கிருத இலக்கியத்தை குறிப்பிடுகிறது. தென்னிந்தியா முழுவதும் சமஸ்கிருத மொழியை எழுதுவதற்கு கிரந்த எழுத்து முறையை பயன்படுத்தப்பட்டது. சமஸ்கிருதமொழியை எழுதுவதற்கு தமிழ் மக்கள் வழங்கிய எழுத்து என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். தமிழ்நாட்டில் மட்டும் கிரந்தம் எழுத்து அப்படியே எழுதப்பட்டு வந்தது. ஏனென்றால் கிரந்தம் எழுத்து தமிழ்நாட்டில் பல்லவர்கள் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டதாக கூறப்படுகிறது. பல்லவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டதா அல்லது உருவாக்கப்பட்டதா என்பது ஆய்வுக்குரியதாகும். தமிழ்நாட்டில் சாசனங்கள் கிரந்த எழுத்திலும், கிரந்தம் மற்றும் வட்டஎழுத்து, கிரந்த மற்றும் தமிழ்எழுத்து ஆகியவற்றில் கிடைக்கின்றன. சாசனம் என்பது பொதுச்சொல் அது இரு வகைப்படும்.· கல்லில் வெட்டப்படுவது கல்வெட்டு சிலாசாசனம்· செப்பேட்டில் வெட்டப்படுவது- தாம்ரசாசனம். பாண்டியன் பராந்தக வீரநாராயணன் காலத்தில் வெளியிட்ட தளவாய்புரம் செப்பேடும், உத்தம சோழனின் சென்னை அருங்காட்சியக செப்பேடு இந்தரகத்தை சார்ந்தவை.

## கிரந்த கல்வெட்டுகள்

கிரந்த எழுத்தில் அமைந்த சமஸ்கிருத மொழி கல்வெட்டுகள். மெய்க்கீர்த்திப்பகுதி மட்டும் கிரந்த எழுத்தில் உள்ள சமஸ்கிருத கல்வெட்டு. தமிழும் கிரந்த எழுத்துகளும் கலந்து எழுதப்பட்டக் கல்வெட்டுகள் என்று பிரிக்கலாம். மண்டகப்பட்டிலுள்ள குடைவரைக் கோயில் கல்வெட்டு முதலாம் மகேந்திரவர்மன் காலத்தை சார்ந்தது செங்கலின்றி, மரமின்றி, உலோகமின்றி, சுதையின்றி அமைக்கப்பட்ட கோயில் என்கிறது கிரந்த கல்வெட்டு.

## வட்டஎழுத்து

வட்டஎழுத்து தமிழ்பிராமி எழுத்துக்களை தொடர்ந்து வட்டெழுத்து கல்வெட்டுகளை நாம் தமிழ்நாடு எங்கிலும் காணமுடிகிறது. இந்த எழுத்து வட்டவடிவில் தோன்றியதால் இப்பெயர் பெற்றது. பாண்டிய நாட்டிலும் சேரநாட்டிலும் மலைப்பகுதியிலும் வெளிப்புற பகுதியிலும் வட்டஎழுத்து கல்வெட்டுகள் கிடைக்கின்றன. சோழநாட்டில் பயன்படுத்தப்படவில்லை. தமிழ்பிராமி கல்வெட்டுகளில் மாற்றம் அடையத் தொடங்கியதும் வட்டவடிவத்தை காணமுடிகிறது. அந்த வடிவம் வட்டவடிவில் உருவம் எடுத்துள்ளது பூலாங்குறிச்சி, அறஞ்சலூர், இந்தளூர், அரசலாபுரம், அம்மன்கோவில்பட்டி, பெருமுகை போன்ற இடங்களில் கிடைக்கும் கல்வெட்டுகளை பார்த்தால் தமிழ்பிராமி எழுத்துக்களில் மாற்றம் அடைந்திருப்பதை அறியலாம். இதுதான் மொழி மாற்றத்தின் முதல் கட்டமாகும். கிபி எட்டாம் நூற்றாண்டு முதல் பாண்டியநாட்டிலும் சேரநாட்டிலும் சமண தளங்களிலும் சிவ விஷ்ணு கோயில்களிலும் வட்ட எழுத்து கல்வெட்டுகள் காணப்படுகிறது. பாண்டியநாட்டிலும் சேரநாட்டிலும் மட்டுமின்றி தொண்டைமண்டலத்தின் புறப்பகுதியிலும் செங்கம், தர்மபுரி, வடதென்ஆற்காடு மாவட்டங்களிலும் கல்வெட்டுகள் வட்டெழுத்தில் காணப்படுகின்றன. பல்லவர்கள் வெளியிட்டுள்ள செப்பேடுகளில் எல்லாம் சமஸ்கிருதமும் கிரந்த எழுத்தையும் இரண்டு பகுதியாகிய தமிழ் எழுத்தையும் பயன்படுத்தினர். தமிழ் மொழியை செப்பேடுகளில் எழுத வட்டெழுத்தை பயன்படுத்தினர். இயல்பாகவே வளர்ந்தது வட்டெழுத்து.

## பிற மொழிகள்

தமிழ்மொழி வரலாற்றை பிறமொழி கல்வெட்டுகள் மூலம் அறியலாம். தமிழகத்தை ஆண்ட விஜயநகர் நாயக்கர் காலத்தில் கட்டப்பட்ட கோயில்களில் கல்வெட்டுகள் தெலுங்கு மற்றும் கன்னட எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் தென் மாவட்டங்களில் மலையாளம் மொழிவட்டெழுத்து கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. சிங்கள மொழிகளில் உள்ள கல்வெட்டுகளில் தமிழ்சொற்கள் இடம்பெற்றுள்ளன. அசோக மன்னரின் கல்வெட்டில் சோழர் பாண்டியர் தொடர்பான தமிழ்ச்சொல் உள்ளன. ஆங்கிலேயர் காலத்தில் ஆங்கிலமொழி கல்வெட்டுகள் தமிழகத்தில் கிடைக்கப் பெறுகின்றன. மலையாளம் தனிமொழியாக வளர்ந்தபோது சமஸ்கிருத எழுத்தையும் இலக்கணத்தையும் எடுத்துக்கொண்டு, வட்டெழுத்தின் இயல்பையும் எடுத்துக்கொண்டு உருவாக்கப்பட்ட எழுத்துதான் ஆரியஎழுத்து எனப்பட்டது. மலையாள மொழியை எழுத பயன்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள தொன்மையான சமஸ்கிருத கல்வெட்டு சிவன்வாயிலில் உள்ள சிம்மவர்மனின் கல்வெட்டு, குடைவரைக் கோயில் கல்வெட்டு முதலாம் மகேந்திரவர்மன் காலத்தைச் சார்ந்தது. தமிழ் மற்றும் கிரந்த எழுத்தில் அமைந்த கிரந்த கல்வெட்டு மாமண்டூர் குடும்பியான்மலை இசைக்ககல்வெட்டுகள், திருச்சி மலைக்கோட்டையில் உள்ள பாடல் கிரந்த எழுத்தில் அமைந்துள்ளது. மகாபலிபுரத்திற்கு அருகிலுள்ள அதிரணசண்டேஸ்வரர் கல்வெட்டு கிரந்தம் நாகரி என இருவரி வடிவத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. தஞ்சை மராட்டிய காலத்திய கல்வெட்டுகள் தமிழ் மராத்தி, தமிழ்-மராத்தி - தெலுங்கு, தமிழ் மராத்தி தெலுங்கு ஆங்கிலம் என இருமொழி மும்மொழி நான்கு மொழிகளில் பொறிக்கப்பட்டுள்ளன.

## முடிவுரை

கல்வெட்டுகள் தான் ஆய்வுக்கு முதன்மையான ஆதாரமாக இருக்கின்றன. தமிழ்மொழி தொடர்பான பன்னாட்டு பயிலரங்கத்தை புதுச்சேரி பல்கலைக்கழகமும் தமிழ் பல்கலைக்கழகமும் இணைந்து நடத்துகிறது. கிமு நான்கு முதல் ஐந்து நூற்றாண்டு காலத்தை சார்ந்த தமிழ் பிராமி கல்வெட்டுக்கள் நடுகற்கள், சோழர்கள் பல்லவர்கள் பாண்டியர்கள் விஜயநகர ஆட்சிகாலத்தை சார்ந்த கல்வெட்டுகளை பற்றி பயிற்சி அளிக்கிறது சங்ககால துறைமுகப் பட்டினங்கள் தொடர்பான அகழாய்வு செய்தான் தமிழர்களின் வணிகம் தொடர்பான ஏராளமான தகவல்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களை வைத்துதான் வரலாற்று ஆசிரியர்கள் சரியான

தகவல்களை தெரிவிக்கிறார்கள் அவர்களின் மொழிபெயர்ப்புக்கும் இது துல்லியமாக அமைகிறது.பெரும்பாலான மொழிகள் ஒன்றிலிருந்து ஒன்று உருவாகின்றன. நவீன மொழிகளைப் போன்று பழங்கால மொழிகள் இல்லை. ஒவ்வொரு சமூகத்தினரும் வெவ்வேறு கலாச்சாரங்களையும் மரபுகளையும் மொழிகளையும் பின்பற்றினர். பழங்கால எழுத்துக்கள் அவற்றின் தனித்துவமான அர்த்தத்தை கொண்டுள்ளன. உலகெங்கிலும் உள்ள பல்வேறு கலாச்சாரங்கள் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் சேவை செய்வதற்கும் மொழியை பயன்படுத்துகின்றனர். உளிப்போன்ற கருவிகள் உலோகம் மரம் மற்றும் கல்பரப்புகளில் எழுத்துகளைக் கொண்டுவர வரைய பயன்படுத்துகின்றனர். கல்வெட்டுகள் உண்மை தன்மையுடைய என்றும் காலத்தால் அழிக்க முடியாத பொக்கிஷம்.

## References


Selvaraj, K., Sridhar, T. (2005) Jambai Oor Aivu, Department of Archaeology, Chennai, India

Sidhamparanaar, S. (2008) Ettu Thogaiyum Tamilar Panbaadum, Arivu Pathippagam, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License